# வேதாகமத்தின் மாபெரும் சத்தியங்கள்

பாடம் – 35

# பழைய ஏற்பாட்டின் முக்கியத்துவம்



# Importance of Old Testament

Bible Research and Study Centre

# வேதாகமத்தின் மாபெரும் சத்தியங்கள்

# பழைய ஏற்பாட்டின் முக்கியத்துவம்

## ஈசாக்கின் திருமணம்

## The Marriage of Issac



கிறிஸ்துவுக்குள் மிகவும்அன்பான சகோதர சகோதரிகளே,

இப்பாடத்தின்மூலம் பழைய ஏற்பாட்டில் தேவனுடைய இரகசியமான சத்தியம் பற்றி அறியலாம். வேதத்தில் மொத்தமுள்ள 66 புத்தகங்களில் 39 புத்தகங்கள் பழைய ஏற்பாட்டில் உள்ளதுடன் நான்கில் மூன்று பாகம் கர்த்தருடைய வார்த்தையை உள்ளடக்கியது.

பழைய ஏற்பாட்டில் உள்ள குடும்ப கதைகள், இஸ்ரயேலர்கள் சந்தித்த போர்கள் மற்றும் அனுபவங்கள், எகிப்திலிருந்து கானானுக்கு அவர்கள் சென்ற பயணம், பின் அவர்கள் செலுத்தின பலிகள் குறித்து, இவையெல்லாம் எதற்கு என அநேகர் ஆச்சரியப்படுவதுண்டு.

ஏன் இவைகள் வேதத்தில் எழுதப்பட்டுள்ளது? இன்றைய நாளில் வாழும் கிறிஸ்தவர்களுக்கு பழைய ஏற்பாடு எவ்விதத்தில் முக்கியமானதாக இருக்கிறது? இதன் காரணங்களை ஆராய்வோம்.

### காரணம் - 1

**எபிரேயர் 10:1**

“நியாயப்பிரமாணமானது வரப்போகிற நன்மைகளின் பொருளாயிராமல், நிழலாய் மாத்திரம் இருக்கிறபடியால், வருஷந்தோறும் இடைவிடாமல் செலுத்தப்பட்டு வருகிற ஒரேவிதமான பலிகளினாலே அவைகளைச் செலுத்த வருகிறவர்களை ஒருக்காலும் பூரணப்படுத்தமாட்டாது”

இவ்வசனத்தில் நிழல் மற்றும் வரப்போகிற நன்மைகள் என்பது, மோசேயின் நியாயப்பிரமாணங்களைக் குறித்ததேயாகும். இந்த நன்மைகள் எப்பொழுது நிறைவேறும்? இயேசு சிலுவையில் மரித்ததை மையமாகக்கொண்டு நிறைவேறும் தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்தைக் குறிக்கிறது. எப்படி ஒரு கட்டிடக் கலைஞர் வீடு கட்டுமுன்பு, மாதிரி வீட்டை செய்து காண்பிப்பாரோ, அதுபோல் இந்த நிழல்கள் நமக்கு ஒரு மாதிரியாக உள்ளது.

இஸ்ரயேல் ஜனங்கள் செலுத்திய ஒரேவிதமான பலிகளெல்லாம் வரப்போகின்ற

உண்மையான பலிக்கு வெறும் நிழலாக இருக்கிறது.

**‘காளை வெள்ளாட்டுக்கடா இவைகளுடைய இரத்தம் பாவங்களை நிவர்த்தி செய்யமாட்டாதே”**

இனி பழையஏற்பாட்டின் முக்கியத்துவத்திற்கான இரண்டாவது காரணத்தைப் பார்ப்போம்.

## காரணம் - 2

**ரோமர் 15:4**

“தேவ வசனத்தினால் உண்டாகும் பொறுமையினாலும், ஆறுதலினாலும் நாம் நம்பிக்கையுள்ளவர்களாகும்படி முன்பு எழுதியிருக்கிறவைகளெல்லாம் நமக்கு போதனையாக எழுதியிருக்கிறது”

பழைய ஏற்பாட்டில் முன்பு எழுதப்பட்டவைகள் , சபையினுடைய படிப்பினை, பொறுமை மற்றும் ஆறுதலுக்காகவே எழுதப்பட்டன. எதற்காகவெனில், மாம்ச சரீரத்தில் வியாதி வருவதுபோல், ஆவிக்குரிய ஜீவியத்தில் நாம் பலவீனமடைந்து வியாதிப்படுகிறோம். அந்த நோயை போக்குவதற்கு பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்களின் வைராக்கிய வாழ்க்கை நமக்கு உதவுகிறது. உதாரணமாக

- ☆ - தன் மகனை பலிசெலுத்த மூன்று நாட்கள் பிரயாணம் செய்த **ஆபிரகாம்**
- ☆ - அவிசுவாசிகள் மத்தியில் தேவனை அறிக்கையிட்டு சிங்கக்குகையில் சந்தோஷமாயிருந்த **தானியேல்**
- ☆ - இன்னும், **யோபு, மோசே, நோவா, யோசேப்பு, தாவீது** போன்ற தேவமனுஷர்களது வாழ்க்கை அனுபவங்களால் ஆறுதலும் உற்சாகமும் அடைகிறோம்.

பழைய ஏற்பாட்டின் முக்கியத்துவத்திற்கான 3வது காரணத்தை பார்ப்போம்.

## காரணம் - 3

**1கொரிந்தியர் 10:11**

’இவைகளெல்லாம் திருஷ்டாந்தங்களாக அவர்களுக்குச் சம்பவித்தது, உலகத்தின் முடிவுகாலத்திலுள்ள நமக்கு எச்சரிப்புண்டாகும்படி எழுதப்பட்டும் இருக்கிறது”

திருஷ்டாந்தம் என்றால் பழையஏற்பாட்டு கதாபாத்திரங்கள், நம் வாழ்க்கையை சீர்படுத்துவதற்காக, நடித்துக் காண்பிப்பதுபோல் உள்ள வேதப் பகுதிகளாகும். இதற்கு ஆதாரமாக, பழைய ஏற்பாட்டில் நடந்த ஒரு திருஷ்டாந்தத்தைப் பார்க்கலாம்.

ஆதியாகமம் 24:1-67 வரை முற்பிதாவாகிய ஆபிரகாம் தன் குமாரன் ஈசாக்குக்கு திருமணம் செய்த சம்பவம் குறித்து பார்ப்போம். முழுமையாக ஒருமுறை வாசித்தறியவும்.

இங்கு ஆபிரகாம் தன் மனைவி சாராள் இறந்தபின்பு தன் ஒரே பேறான குமாரன் ஈசாக்குக்கு பெண் கொள்ளும்படி தன் வீட்டு வேலைக்காரனாகிய எலெயேசரிடம் கூறுகிறார்.

**ஆதியாகமம் 24:3,4**

“நான் குடியிருக்கிற கானானியருடைய குமாரத்திகளில் நீ என் குமாரனுக்குப்

பெண்கொள்ளாமல், நீ என் தேசத்துக்கும் என் இனத்தாரிடத்துக்கும்போய், என் குமாரனாகிய ஈசாக்குக்குப் பெண்கொள்வேன் என்று, வானத்துக்குத் தேவனும் பூமிக்குத் தேவனுமாகிய கர்த்தர்பேரில் எனக்கு ஆணையிட்டுக் கொடுக்கும்படிக்கு உன் கையை என்தொடையின்கீழ் வை என்றார்.."

**ஆதியாகமம் 24:5-8** மேலும் பெண் என் பின்னே வர மனதில்லாதிருந்தால் நீர் விட்டுவந்த தேசத்திற்குத்தானே உம்முடைய குமாரனை மறுபடியும் அழைத்துக்கொண்டு போக வேண்டுமா என எலெயேசர் கேட்கும்போது, ஆபிரகாம் அவ்வாறு வேண்டாம். மாறாக தேவன் அப்பெண்ணை நீ அழைத்துக்கொண்டுவரும்படி தம்முடைய தூதனை உனக்கு முன்பாக அனுப்புவார் என்று உறுதியாகச் சொல்கிறார்.

**ஆதியாகமம் 24:10** பின்பு எலெயேசர் தன் எஜமானுடைய ஒட்டகங்களில் பத்து ஒட்டகங்களையும், சகலவிதமான உச்சிதமான பொருட்களையும் எடுத்துக்கொண்டு ஆபிரகாமின் இடத்திலிருந்து பயணமாகிறார். ஊருக்கு வந்து சேர்ந்தபின்பு

**ஆதியாகமம் 24:11** ஊருக்குப் புறம்பே ஒரு கிணற்றண்டையில் தன் ஒட்டகங்களை மடக்கி ஜெபித்தார்

**ஆதியாகமம் 24:12-14**

"என் எஜமானாகிய ஆபிரகாமுக்கு தேவனாயிருக்கிற கர்த்தாவே, இன்றைக்கு நீர் எனக்குக் காரியம் சித்திக்கப்பண்ணி, என் எஜமானாகிய ஆபிரகாமுக்குத் தயவு செய்தருளும். இதோ, நான் இந்தத் தண்ணீர்த்துரவண்டையிலே நிற்கிறேன். இந்த ஊராருடைய பெண்கள் தண்ணீர் மொள்ளப் புறப்பட்டு வருவார்களே, நான் குடிக்க உன் குடத்தைச் சாய்க்கவேண்டும் என்று நான் சொல்லும்போது.. குடி என்றும், உன் ஒட்டகங்களும் குடிக்கும்படி வார்ப்பேன் என்றும் சொல்லும் பெண் எவளோ, அவளே நீர் உம்முடைய ஊழியக்காரனாகிய ஈசாக்குக்கு நியமித்தவளாயிருக்கவும், என் எஜமானுக்கு அனுக்கிரகம் செய்தீர் என்று நான் அதினாலே அறியவும் செய்தருளும்"

எலியேசர் தாம் மேற்கொண்ட பயணத்திற்கு ஒரு வழிகாட்டவும், தேர்ந்தெடுக்கப்படுகிற பெண் யார் என்று காண்பிக்கும்படியாகவும் ஆபிரகாமின் தேவனிடத்தில் ஜெபித்தார்.

**ஆதியாகமம் 24:15**

"அவன் இப்படிச் சொல்லி முடிக்கும் முன்னே, இதோ, ஆபிரகாமுடைய சகோதரனாகிய நாகோரின் மனைவி மில்க்காளுடைய குமாரனாயிருக்கிற பெத்துவேலுக்குப் பிறந்த ரெபேக்காள் குடத்தைத் தோள்மேல் வைத்துக்கொண்டு புறப்பட்டு வந்தாள்"

**ஆதியாகமம் 24:16**

"அந்த பெண் மகா ரூபவதியும், புருஷனை அறியாத கன்னிகையுமாய் இருந்தாள். அவள் துரவில் இறங்கி, தன் குடத்தை நிரப்பிக்கொண்டு ஏறிவந்தாள்"



**ஆதியாகமம் 24:17-19**

"அப்பொழுது அந்த ஊழியக்காரன் அவளுக்கு எதிர்கொண்டோடி, உன் குடத்திலிருக்கிற தண்ணீரில் கொஞ்சம் குடிக்கத் தரவேண்டும் என்றான். அதற்கு அவள்.. குடியும் என் ஆண்டவனே என்று சீக்கிரமாய்க் குடத்தைத் தன் கையில் இறக்கிக்கொண்டு, அவனுக்குக் குடிக்கக் கொடுத்தாள்.கொடுத்தபின் , உம்முடைய ஒட்டகங்களும் குடித்துத் தீருமட்டும் அவைகளுக்கும் மொண்டு வார்ப்பேன் என்று சொல்லி.."

தேவன் எலியேசரின் ஜெபத்துக்கு உடனே செவிசாய்த்து, ஒரு அற்புதமான அடையாளத்தைக் காண்பித்தார்.

**ஆதியாகமம் 24:20,21**



"சீக்கிரமாய்த் தன் குடத்துத் தண்ணீரை தொட்டியிலே ஊற்றிவிட்டு, இன்னும் மொண்டுவரத் துரவண்டையிலே ஓடி, அவனுடைய ஒட்டகங்களுக்கெல்லாம் மொண்டு வார்த்தாள். அந்த மனிதன் அவளைக் குறித்து ஆச்சரியப்பட்டு, கர்த்தர் தன் பிரயாணத்தை வாய்க்கப் பண்ணினாரோ இல்லையோ என்று அறியும்பொருட்டு மவுனமாயிருந்தான்"

10 ஒட்டகங்களுக்கும் தண்ணீர் வார்க்கும் கடினமான வேலையை அவள் செய்தாள்.
1 ஒட்டகம் சுமார் 10 குடம் தண்ணீர் குடிக்கும்.
10 ஒட்டகங்களுக்கு 100 குடங்கள் தேவைப்பட்டிருக்கும்.
அவ்வளவு நேரமும் எலியேசர் அவளை கவனித்துக்கொண்டும், தம் ஜெபத்தைக் கேட்ட தேவனுக்கு நன்றிதெரிவித்துக்கொண்டும் இருந்திருப்பார்.

**ஆதியாகமம் 24:22**

'ஒட்டகங்கள் குடித்துத் தீர்ந்தபின் அந்த மனிதன் அரைச்சேக்கல் எடையுள்ள பொற்காதணியையும் அவள் கைகளுக்குப் பத்துச் சேக்கல் எடைப் பொன்னுள்ள கடகங்களையும் எடுத்துக்கொடுத்து.."



இந்தப் பரிசுகளைப் பெற்ற ரெபேக்காள், 10 ஒட்டகங்களுக்கு தண்ணீர் வார்த்ததற்கு இவ்வளவு பெரிய பரிசா? என்று அதிர்ச்சியும் ஆச்சரியமும் அடைந்திருக்கவேண்டும்.

பின்பு எலியேசர் அவளுடைய குடும்பத்தைப் பற்றியும், தான் அவள் இல்லத்துக்கு வரலாமா? என்றும் விசாரித்தார்.

**ஆதியாகமம் 24:23**

“நீ யாருடைய மகள், எனக்குச் சொல்லவேண்டும், நாங்கள் உன் தகப்பன் வீட்டில் இராத்தங்க இடம்உண்டா என்றான்”

அதற்கு பதிலாக, தான் ஆபிரகாமின் மூத்த சகோதரரான நாகோரின் கொள்ளுப் பேத்தி என்று கூறினாள். மேலும் ரெபேக்காள் கூறியது -

**ஆதியாகமம் 24:25**

“எங்களிடத்தில் வைக்கோலும் தீவனமும் வேண்டியமட்டும் இருக்கிறது, இராத்தங்க இடமும் உண்டு என்றாள்”

இவ்வாறு கூறி தம் இல்லத்திற்கு அழைத்துச் சென்று, நடந்தவற்றை தன் வீட்டாரிடத்தில் மகிழ்ச்சியுடன் எடுத்துரைக்கிறாள்.

ரெபேக்காள் கூறினதைக் கேட்ட அவளது சகோதரன் லாபான், எலியேசரை தன் வீட்டிற்கு அழைத்ததை வாசிக்கலாம் -

**ஆதியாகமம் 24:31**

“கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டவரே, உள்ளே வாரும், நீர் வெளியே நிற்பானேன்? உமக்கு வீடும், ஒட்டகங்களுக்கு இடமும் ஆயத்தம் பண்ணியிருக்கிறேன் என்றான்”

ரெபேக்காளின் வீட்டிற்கு சென்ற எலியேசர், தான் யார் என்பதையும், வந்த நோக்கத்தையும் தெளிவாக எடுத்துரைத்தார்-

**ஆதியாகமம் 24:35-48**

“கர்த்தர் என் எஜமானை ஆசீர்வதித்திருக்கிறார். அவர் சீமானாயிருக்கிறார்..என் எஜமானுடைய மனைவியாகிய சாராள் முதிர்வயதானபோது ஒரு குமாரனைப் பெற்றாள்,அவர் தனக்கு உண்டான யாவையும் அவனுக்குக் கொடுத்திருக்கிறார்.

என் எஜமான் என்னைநோக்கி, நீ என் தகப்பன் வீட்டுக்கும், என் இனத்தாரிடத்துக்கும்போய் , என் குமாரனுக்குப் பெண்கொள்ளவேண்டும் என்று ஆணையிட்டுக்கொடுக்கும்படி சொன்னார். அப்பொழுது நான் என் எஜமானை நோக்கி - ஒருவேளை அந்தப் பெண் என் பின்னே வராதே போனாலோ என்று கேட்டதற்கு , அவர் - நான் வழிபடும் கர்த்தர் உன்னோடே தம்முடைய தூதனை அனுப்பி, உன் பிரயாணத்தை வாய்க்கப் பண்ணுவார்.. என்றார். அப்படியே நான் இன்று துரவண்டையிலே வந்து, என் எஜமானாகிய ஆபிரகாமின் தேவனாகிய கர்த்தரே, என் பிரயாணத்தை நீர் இப்பொழுது வாய்க்கப்பண்ணுவீரானால், இதோ நான் தண்ணீர்த் துரவண்டையிலே நிற்கிறேன். தண்ணீர் மொள்ள வரப்போகிற கன்னிகையை நான் நோக்கி: உன் குடத்திலிருக்கிற தண்ணீரில் கொஞ்சம் எனக்குக் குடிக்கத் தரவேண்டும் என்று கேட்கும்போது - நீ குடி என்றும், உன் ஒட்டகங்களுக்கும் மொண்டு வார்ப்பேன் என்றும் சொல்லும் பெண்ணே கர்த்தர் என்

எஜமானனுடைய குமாரனுக்கு நியமித்த ஸ்திரீயாகவேண்டும் என்றேன். நான் இதை என் இருதயத்தில் சொல்லிமுடிக்குமுன்னே, இதோ ரெபேக்காள் தன் குடத்தைத் தோள்மேல் வைத்துக்கொண்டு புறப்பட்டுவந்து, துரவில் தண்ணீர் மொண்டாள். அப்பொழுது நான் எனக்குக் குடிக்கத் தரவேண்டும் என்றேன். அவள் சீக்கிரமாய்த் தன் தோள்மேலிருந்த குடத்தை இறக்கி, குடியும், உம்முடைய ஒட்டகங்களுக்கும் வார்ப்பேன் என்றாள். அப்பொழுது நீ யாருடைய மகள் என்று அவளைக் கேட்டேன். அதற்கு அவள் - நான் பெத்துவேலின் மகள் என்றாள். அப்பொழுது அவளுக்கு காதணியையும். கைகளிலே கடகங்களையும் போட்டு, தலைகுனிந்து கர்த்தரைப் பணிந்துகொண்டு..”

தேவன் அவரை அற்புதமாகவும் அதிசயமாகவும் வழிநடத்தின விதத்தையும், ரெபேக்காள் ஈசாக்குக்கு நியமிக்கப்பட்ட மணப்பெண் என்பதை கண்டறியசெய்தார் என்று விபரமாகக் கூறினார்.

இறுதியாக அவர்களிடம் எலெயேசர் கேட்டதாவது -

**ஆதியாகமம் 24:49**

“இப்பொழுது நீங்களும் என் எஜமானுக்குத் தயையும் உண்மையும் உடையவர்களாய் நடக்க மனதுள்ளவர்களானால் எனக்குச் சொல்லுங்கள், இல்லையென்றால் அதையும் எனக்குச் சொல்லுங்கள். அப்பொழுது நான் வலதுபுறத்தையாகிலும் இடதுபுறத்தையாகிலும் நோக்கிபோவேன் என்றான்”

இங்கு “வலதுபுறம்” என்றால் ‘ஏற்றுக்கொள்ளுதல்” என்றும், ‘இடது புறம்” என்றால் ‘ஏற்றுக்கொள்ளாமை” என்றும் பொருள்படும். அதற்கு ரெபேக்காளின் வீட்டார் பதில் கூறுகையில் -

**ஆதியாகமம் 24:50,51**

“அப்பொழுது லாபானும் பெத்துவேலும் பிரதியுத்தரமாக, இந்தக் காரியம் கர்த்தரால் வந்தது, உமக்கு நாங்கள் நலம் பொலம் ஒன்றும் சொல்லக்கூடாது. இதோ, ரெபேக்காள் உமக்கு முன்பாக இருக்கிறாள். கர்த்தர் சொன்னபடியே அவள் உமது எஜமானாகிய குமாரனுக்கு மனைவியாகும்படி அவளை அழைத்துக்கொண்டுபோம் என்றார்கள்”

மேலும் தொடர்ந்து வாசிக்கையில்

**ஆதியாகமம் 24:53**

“பின்பு அந்த ஊழியக்காரன் வெள்ளியுடைமைகளையும் பொன்னுடைமைகளையும் வஸ்திரங்களையும் எடுத்து, ரெபேக்காளுக்குக் கொடுத்ததுமன்றி, அவளுடைய சகோதரனுக்கும் தாய்க்கும் சில உச்சிதங்களையும் கொடுத்தான்”

எலெயேசர் முதலில் வெள்ளியும், பின்பு பொன்னினாலுமான பரிசைக் கொடுத்ததில் ஏதாகிலும் முக்கியத்துவம் இருக்கவேண்டும். தொடர்ந்து வாசிக்கையில்,

**ஆதியாகமம் 24:54-56**

“பின்பு அவனும் அவனோடிருந்த மனிதரும் புசித்துக் குடித்து இராத்தங்கினார்கள். காலையிலே எழுந்திருந்து, அவன் என் எஜமானிடத்துக்கு என்னை அனுப்பிவிடுங்கள் என்றான். அப்பொழுது அவள் சகோதரனும் அவள் தாயும், பத்து நாளாகிலும் பெண் எங்களோடிருக்கட்டும், பிற்பாடு போகலாம் என்றார்கள். அதற்கு அவன், கர்த்தர் என் பிரயாணத்தை வாய்க்கப் பண்ணியிருக்க, நீங்கள் எனக்குத் தடைசெய்யாதிருங்கள்.. என்றான்”

எலெயேசர் உடனடியாக செல்லவேண்டும் என்றுகூறினதால், அவர்கள் ரெபெக்காளை அழைத்து அவளுடைய வாய்மொழியைக் கேட்டார்கள்.

**ஆதியாகமம் 24:58**

“ரெபெக்காளை அழைத்து.. நீ இந்த மனிதனோடேகூடப் போகிறாயா என்று கேட்டார்கள். அவள் போகிறேன் என்றாள்”

24மணிநேரம் மட்டுமே அறிந்திருந்த ஒரு மனிதனோடு செல்ல மனமுவந்து சம்மதிக்கிறாள். இங்கு ரெபெக்காளின் விசுவாசத்தை நாம் சிந்திக்கவேண்டும். தான் எடுத்த இந்த முடிவின்மூலம் தன் வாழ்க்கையையே ஒப்புக்கொடுத்தாள்.

**ஆதியாகமம் 24:60**

“ரெபெக்காளை வாழ்த்தி - எங்கள் சகோதரியே , நீ கோடாகோடியாய்ப் பெருகுவாயாக, உன் சந்ததியார் தங்கள் பகைஞருடைய வாசல்களைச் சுதந்தரித்துக் 'கொள்வார்களாக என்று ஆசீர்வதித்தார்கள்”

“நீ கோடாகோடியாய்ப் பெருகுவாயாக என்ற ஆசீர்வாதம் எப்படி சாத்தியமாகும்? அவ்வளவு குழந்தைகளை பெற்றெடுக்கமுடியுமா? இதன் அர்த்தத்தை இப்பாடத்தின் இறுதியில் உணர்ந்துகொள்வோம் . மேலும் வாசிப்போம் -

**ஆதியாகமம் 24:61**

“அப்பொழுது ரெபெக்காளும் அவள் வேலைக்காரிகளும் எழுந்து ஒட்டகங்கள்மேல் ஏறி, அந்த மனிதனோடேகூடப் போனார்கள், ஊழியக்காரன் ரெபெக்காளை அழைத்துக்கொண்டுபோனான்”

அவர்கள் ஆபிரகாமின் தேசமாகிய கானானை நோக்கி நீண்ட பயணத்தைத் தொடங்கினார்கள். அந்தப் பயணத்தின் முடிவில்..

**ஆதியாகமம் 24:63-67**

“ஈசாக்கு தென்தேசத்தில் குடியிருந்தான். அப்பொழுது அவன் லாகாய்ரோயீ என்னப்பட்ட துரவின் வழியாய்ப் புறப்பட்டு வந்தான். ஈசாக்கு சாயங்காலவேளையிலே தியானம்பண்ண வெளியிலே போயிருந்து, தன் கண்களை ஏறெடுத்துப் பார்த்தபோது, ஒட்டகங்கள் வரக்கண்டான். ரெபெக்காளும் தன் கண்களை ஏறெடுத்து

ஈசாக்கைக்கண்டபோது, ஊழியக்காரனைநோக்கி , அங்கே வருகிற அந்த மனிதன் யார் என்று கேட்டாள். அவர்தான் என் எஜமான் என்று ஊழியக்காரன் சொன்னான். அப்பொழுது அவள் ஒட்டகத்தை விட்டிறங்கி முக்காடிட்டுக் கொண்டாள். ஊழியக்காரன் தான் செய்த சகல காரியங்களையும் ஈசாக்குக்கு விவரித்துச் சொன்னான். அப்பொழுது ஈசாக்கு ரெபெக்காளைத் தன் தாய் சாராளுடைய கூடாரத்துக்கு அழைத்துக்கொண்டுபோய், அவளைத் தனக்கு மனைவியாக்கிக்கொண்டு அவளை நேசித்தார், ஈசாக்கு தன் தாய்க்காகக் கொண்டிருந்த துக்கம் நீங்கி ஆறுதல் அடைந்தான்"

ஈசாக்கு ரெபெக்காளை மணமுடித்தபின்பு, ரெபெக்காள் ஈசாக்கின் மனைவியானாள்.

இந்த வேதப்பகுதியானது ஆபிரகாமின் வாழ்வில் நடந்த உண்மையான சம்பவங்களாகும். இவை சபையாகிய நமக்கு முக்கியம் வாய்ந்த திருஷ்டாந்தமாகவும் நிழலாகவும் இருக்கிறது.

இந்தப் பகுதியில் நமக்கு உள்ள திருஷ்டாந்தங்கள் என்ன என்று பார்ப்போம்.

ஆபிரகாம் தன் ஒரே குமாரனான ஈசாக்குக்கு மணவாட்டியை தேர்ந்தெடுக்க ஆட்களை அனுப்பினதுபோல, இன்றும் ஒரு மணவாட்டியை தேர்ந்தெடுப்பதற்கான பரீட்சை நடந்துகொண்டிருக்கிறது. இதைக்குறித்து நாம் வாசிப்போம் -

**2கொரிந்தியர் 11:2**

"நான் உங்களைக் கற்புள்ள கன்னிகையாகக் கிறிஸ்து என்னும் ஒரே புருஷனுக்கு ஒப்புக்கொடுக்க நியமித்தபடியால் .."

இது மணவாளனாகிய இயேசுகிறிஸ்துவின் மணவாட்டியாவதற்கான தேர்வு. அந்த மணவாட்டி -"சபை" ஆகும்.

**வெளிப்படுத்தல் 19:7**


"ஆட்டுக்குட்டியானவருடைய கல்யாணம் வந்தது, அவருடைய மனைவி தன்னை ஆயத்தம் பண்ணினாள் என்று சொல்லக்கேட்டேன்"



இயேசுகிறிஸ்துவின் மணவாட்டியாகிய சபை தேர்வு செய்யப்படும் விதத்தை இன்று நாம் தெளிவாகப்புரிந்துகொள்ளப் போகிறோம்

இப்பொழுது திருஷ்டாந்தத்தில் உள்ள பல்வேறு நிழல்களைப் பார்க்கலாம்.

**ஆபிரகாம்** - பிதாவாகிய தேவனை நிழலாக பிரதிபலிக்கிறார். இது தேவன் தன் ஒரே பேரான குமாரனை இவ்வுலக இரட்சிப்பிற்காக கொடுத்ததுபோல்(யோவான் 3:16), ஆபிரகாமும் தன் ஒரே குமாரனை பலிசெலுத்த ஒப்புக்கொடுத்ததின் மூலம் நிரூபணமாகிறது.



**ஈசாக்கு** - தேவனுடைய ஒரே பேரான குமாரனாகிய இயேசுகிறிஸ்துவைக் குறிக்கிறார்(யோவா 1:18)

**எலெயேசர்** - இவர் ஆபிரகாமின் பிரதான ஊழியக்காரன். தேவனும் அவ்வாறே தம் பணிகளை நிறைவேற்றுவதற்கு சில ஊழியக்காரர்களை நியமித்திருக்கிறார். ஊழியக்காரர்கள் என்றுமே தங்கள் சுய கருத்துக்களைக்கூறமுடியாது. அவ்வாறே தேவனுடைய ஊழியக்காரர்களும் சுய கருத்துக்களை கூற இயலாது. இதைக்குறித்து

**யோவான் 16:13**

"சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார். அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தான் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ்சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார்"



இன்று சபையானது தெய்வீக வல்லமையாகிய பரிசுத்தஆவியின்மூலமே தேர்வுசெய்யப்பட்டு வருகிறது. இதைக் குறித்து

**லூக்கா 24:49**

"என் பிதா வாக்குத்தத்தம் பண்ணினதை இதோ நான் உங்களுக்கு அனுப்புகிறேன். நீங்களோ உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும்வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள் என்றார்"

எலியேசர் இங்கு தேவனுடைய பரிசுத்தஆவிக்கு நிழலாக இருக்கிறார்.

தேவன் தம்மோடு இருக்கும் தூதர்கள் மத்தியில் தம் குமாரனுக்கு மணவாட்டியைத் தேர்வுசெய்ய விரும்பவில்லை. மாறாக

**ஆதியாகமம் 24:4**

"..நீ என் தேசத்துக்கும் என் இனத்தாரிடத்திற்கும் போய்.."

பரலோகத்திலிருந்து தூர தேசமாகிய பூமியை இது குறிக்கிறது. தேவனன தம் குமாரனுக்கு மணவாட்டியை இந்த மனிதகுலத்திலிருந்து தேர்வுசெய்ய தீர்மானித்தார்.

**ஆதியாகமம் 24:10**

"தன் எஜமானுடைய ஒட்டகங்களில் பத்து ஒட்டகங்களைத் தன்னுடனே கொண்டு.."

எலெயேசர் தன்னோடு கூட்டிச்சென்ற இந்த 10 ஒட்டகங்களும் எதைக் குறிக்கிறது? இது தேவனுடைய வார்த்தைகளிலுள்ள 10 முக்கிய உபதேசங்களைக் குறிக்கிறது. இந்த 10 உபதேசங்களைக்குறித்து நாம் பின்வரும் வகுப்புகளில் அறிந்துகொள்ளலாம்.



பரிசுத்தஆவியே இந்த சத்தியங்களை எடுத்துச்சென்று திருச்சபைக்கு வெளிப்படுத்துகிறது.

**"அவர் சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை வழிநடத்துவார்"- யோவா16:13**

**ஊருக்குப்புறம்பே ஒரு தண்ணீர்த் துரவண்டையிலே** (ஆதி 24:11) - கிணறு ஜீவத்தண்ணீரைக்கொண்ட வேதாகமத்தைக் குறிக்கிறது.

".. **தண்ணீர் மொள்ள ஸ்திரீகள் புறப்படுகிற சாயங்கால வேளையில்**" - ஜீவத்தண்ணீராகிய தேவ வார்த்தைகளை வாஞ்சையோடு தேடுகின்ற பல்வேறு சபைகளில் உள்ள கிறிஸ்தவர்களைக் குறிக்கும்.

**யோவான் 4:10**

"நீயே அவரிடத்தில் கேட்டிருப்பாய், அவர் உனக்கு ஜீவத்தண்ணீரைக் கொடுத்திருப்பார்"

**ரெபெக்காள்**˙-கிறிஸ்துவுக்கென தீர்மானிக்கப்பட்ட மணவாட்டியாகிய சபையைக் குறிக்கிறாள்.

அவள் மிகவும் அழகுள்ள கன்னியுமாய் இருந்தாள் என்பது மணவாட்டியின் குணநலன்களையும், அவர்கள் தேவனுடைய பரிசுத்தமான சத்தியத்தின்மேல் வைத்திருக்கும் விசுவாசத்தையும் குறிக்கிறது.

**'சீக்கிரமாய் தன் குடத்துத் தண்ணீரைத் தொட்டியிலே ஊற்றிவிட்டு, இன்னும் மொண்டுவரத் துரவண்டையில் ஓடி..** - இது மணவாட்டி வகுப்பார் தேவன்பேரிலும், அவருடைய சத்தியத்தின்பேரிலும் அவர்கள் கொண்ட வாஞ்சையும், சத்திய வேலைகளுக்காக அயராது உழைப்பதில் ஆற்றலையும் உற்சாகத்தையும் காட்டுகிறது.

**பொற்காதணி, இரண்டு கடகங்களை எலியேசர் பரிசாக கொடுத்தது** - இது மணவாட்டி வகுப்பார் பரிசுத்தஆவியின்மூலமாகப் பெறக்கூடிய 'தெய்வீகப் பரிசுகளைக்" குறிக்கும்.

**காதணிகள்** - தேவனுடைய தெய்வீக வல்லமையினால் பிறக்கும் "புரிந்துகொள்ளக்கூடிய காது"ஐ குறிக்கும். காதுள்ளவன் கேட்கக்கடவன் என்று இயேசு கூறினது, இந்த காதணிகளை பரிசுத்தஆவியின் வல்லமையால் பெற்றுக்கொண்ட அனைவரும் கேட்கக்கடவர் என்பதே.

**கடகம்** - தேவஊழியத்தை செய்வதற்கான வாய்ப்புக்களைக் குறிக்கும். ஏனெனில் கரங்கள் கிரியைகளைக் குறிக்கிறது.

**மேலும் திருமணக் காரியங்கள் நிச்சயிக்கப்பட்ட பின்பும் ரெபெக்காளுக்கு பரிசுகள்**

**வழங்கப்பட்டது** (ஆதியாகமம் 24:53)- இது தீர்மானிக்கப்பட்ட மணவாட்டி வகுப்பார் கிறிஸ்தவ விசுவாசத்திலும், தேவனுடைய ஞானத்திலும் வளர்ந்தபின்பு பெற்றுக்கொள்ளும் பரிசுகளாகும்.
1. வெள்ளி நகைகள் - தேவனுடைய விலையேறப்பெற்ற சத்தியம் வெள்ளிக்கு ஒப்பாக கீழ்க்காணும் வசனம் கூறுகிறது -

**சங்கீதம் 12:6**

"கர்த்தருடைய சொற்கள் மண்குகையில் ஏழுதரம் உருக்கி, புடமிடப்பட்ட வெள்ளிக்கொப்பான சுத்த சொற்களாயிருக்கிறது"

தேவனுடைய தெய்வீகத்திட்டத்தில் உள்ள சத்தியங்கள் திறக்கப்பட்டு, புரிந்துகொள்ளப்படுகிறது. இதுவே முதலில் பெற்றுக்கொள்ளும் பரிசாகும்

2. பொன் ஆபரணங்கள ் - இது தெய்வீக சுபாவத்துக்கு பங்குள்ளவர்களாகும் மணவாட்டி வகுப்பாருக்கு அளிக்கப்பட்ட மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களை குறிக்கும்.

**2பேதுரு 1:4**

"..திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகும்பொருட்டு மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களும் அவைகளினாலே நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது"

இங்கு பொன் என்பது சபை வகுப்பாருக்கு இப்பொழுது கொடுக்கப்பட்டிருக்கிற பரலோக இரட்சிப்புக்கான 'பரம அழைப்பை" குறிக்கிறது.

3. வஸ்திரங்கள் - இது நம்முடைய பாவங்களை மறைத்து நம்மை நீதிமானாக்கி, 'பரலோக கிருபாசனத்திற்கு" தகுதிப்படுத்துகிற நீதியின் வஸ்திரங்களாகும்.
இந்த வஸ்திரமானது தேவனுடைய நீதியையும் இயேசுகிறிஸ்து கல்வாரி சிலுவையில் இரத்தம் சிந்தியதால் நம் பாவங்கள் மூடப்பட்டதையும் குறிக்கிறது.

இவ்வாறு சபையானது அனைத்து ஆவிக்குரிய பரிசுகளையும் பரிசுத்தஆவியின் மூலமாக (நிழல் - எலியேசர்) பெற்றுக்கொள்கிறார்கள்.

ரெபெக்காளை அழைத்து நீ இந்த மனிதனோடேகூடப் போகிறாயா என்று கேட்டார்கள்.
அவள் போகிறேன் என்றாள ் - இது இயேசுகிறிஸ்துவின் மேல் சபை வைத்திருந்த நம்பிக்கை, விசுவாசத்தினை காண்பிக்கிறது. என்னநேர்ந்தாலும் கிறிஸ்துவின் அடிச்சுவடுகளைப் பின்பற்ற முழுமனதுடன் ஒப்புக்கொடுப்பதை குறிக்கிறது.

ரெபெக்காள் தன் வாழ்வைப் பணயம்வைத்து முன்பின் பழக்கம் இல்லாதவரோடு போகத் துணிந்ததுபோல, சபை ஜனங்களும் கண்ணால் காணமுடியாத ஆண்டவர்மேல் நம்பிக்கை கொண்டு, தங்கள் வாழ்க்கையை ஒப்புக்கொடுப்பதைக் குறிக்கிறது.

"நீ கோடாகோடியாய்ப் பெருகுவாயாக" - இங்கு ரெபெக்காள் ஆட்டுக்குட்டியானவரின்

மணவாட்டியாக, கர்த்தரோடுகூட மகிமை பெறப்போகின்ற சபையைக் குறிக்கிறாள் என்று நாம் அறிந்திருக்கிறோம். இதோடுகூட இன்னும் பெரிய காரியங்கள் இருக்கின்றன.

- ☆ அவள் இரண்டாம் ஆதாமினுடைய இரண்டாம் ஏவாளாக இருக்கப் போகிறாள்(1கொரி15:45)
- ☆ உயிர்த்தெழுதலின்போது கிறிஸ்துவும் சபையும் இணைந்து இவ்வுலகத்திற்கு ஜீவனையும் ஆசீர்வாதத்தையும் அளிப்பார்கள் **(வெளிப்படுத்தல் 22:17)**

இந்த உலகில் வாழும் கோடிக்கணக்கான ஜனங்களே ரெபெக்காளின் பிள்ளைகளாகப்போகும் ஜனங்களாவர்.

**ஆதியாகமம் 24:61** "ரெபெக்காளும் அவள் வேலைக்காரிகளும் எழுந்து ஒட்டகங்கள்மேல் ஏறி, அந்த மனிதனோடேகூடப் போனார்கள்" - இது மாம்சத்திலிருக்கும் சபையின் பூமிக்குரிய பயணத்தைக் குறிக்கும் - பரம கானானை நோக்கின பயணம்.



ஈசாக்கு சாயங்காலவேளையிலே தியானம் பண்ணப்போயிருந்து தன் கண்களை ஏறெடுத்துப் பார்த்தபோது.. - இவைகள் சுவிசேஷயுக முடிவையும், முதலாம் உயிர்த்தெழுதலின்போது சபையானது தன் ஆண்டவரை சந்திக்கும் நேரத்தையும் குறிக்கிறது.

இங்கு ஈசாக்கு தன் மனைவியின் அழகைக் காண, அவள் மூடியிருந்த முக்காட்டை நீக்கவேண்டும் - அதுபோல் நம் ஆண்டவரும் நமக்குள்ளே மறைந்திருக்கும் அழகைக் காண விரும்புகிறார். எந்த விதமான அழகைக் காண இயேசு விரும்புகிறார்?

**1பேதுரு 3:3,4**

"மயிரைப்பின்னி, பொன்னாபரணங்களை அணிந்து, உயர்ந்த வஸ்திரங்களை உடுத்திக்கொள்ளுதலாகிய புறம்பான அலங்கரிப்பு உங்களுக்கு அலங்காரமாயிராமல், அழியாத அலங்கரிப்பாயிருக்கிற சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குணமே உங்களுக்கு அலங்காரமாயிருக்கக்கடவது. அதுவே தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்றது".

நமக்குள் மறைந்திருக்கும் பரிசுத்தம், உண்மை ஆகிய குணங்களையே கர்த்தர் எதிர்பார்க்கிறார். இது எவ்வாறு கிடைக்கும்? மிகுந்த உபத்திரவங்களினாலும், சுயத்தை வெறுப்பதினாலுமே.

இப்படியாக மணவாட்டி எப்பொழுதும் கர்த்தருடனே கூட இருப்பாள் **(1தெசலோனிக் 4:17 )**

ஈசாக்கு ரெபெக்காளின் கதை திருமணத்தில் முடிந்ததுபோல, இயேசு மற்றும் சபையின் கதையும் ஆட்டுக்குட்டியானவரின் பிரமாண்டமான திருமணத்தில் முடிவடையும்.

இப்படியாக தேவனின் தெய்வீக சத்தியங்களைக் கற்றுக்கொடுக்கிற திருஷ்டாந்தம் அல்லது நிழலை பழைய ஏற்பாட்டிலிருந்து பார்த்தோம்.

இதுபோன்ற அநேக திருஷ்டாந்தங்கள் பழையஏற்பாட்டில் உள்ளன -

- ☆ மோசேயை மத்தியஸ்தராகக்கொண்டு இஸ்ரயேல் ஜனங்கள் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலைபெற்று, கானான்தேசத்தை நோக்கி பயணம் சென்றது.
- ☆ சாலமோனின் உன்னதப்பாட்டில் கிறிஸ்து தம் மணவாட்டியுடன் கொண்டுள்ள உறவை எடுத்துரைப்பது
- ☆ தேவனுடைய பிரமாணங்களும் அதில் மறைந்துள்ள பஸ்கா, யூபிலி போன்ற இன்னும் அநேக காரியங்கள் உள்ளன. இதுபற்றி வரப்போகிற பாடங்களில் அறிந்துகொள்ளலாம்.

**தேவன் தாமே நம் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக. ஆமென்**

**இந்த சத்தியங்களை பற்றி மேலும் அறிந்து கொள்ள தொடர்பு கொள்ளவும்:**
For Further Details Please Contact:
bibleresearchandstudy@gmail.com, victorgnanaraj01@gmail.com victor_vicky
+919443321874 https://www.facebook.com/bibleresearch/